IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 95/2022

| | |
|---|---|
| Deposition of Witness | : DW 1 |
| Name | : ஜோதி (வயது – 55) |
| Father's Name /W/o | : க/பெ ராஜா |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : சத்துவாச்சேரி |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 06.10.2025.

## குறுக்கு விசாரணை

1. என் பூர்வீக விலாசம் என்னவென்றால் விலாசம் தெரியாது. நான் பூர்வீகமாக தாவா சொத்தில் வாழ்ந்ததற்கு இந்நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. என் பெயரில் அரசாங்கம் பட்டா வழுங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அரசாங்க நிலம் என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

2. தாவா சொத்து குறித்து சகுந்தலாவிற்கு தான் பட்டா வழுங்கப்பட்டது என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அரிகில்பாடி கிரமத்தில் வசிக்கும் மக்களுக்கு அரசாங்கம் கிராம நத்தம் பட்டா வழுங்கினார்கள் என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என் பெயரில் பட்டா வழுங்கப்ட்டது என்று என் பிரமாண பத்திரத்திலோ அல்லது பதிலுரையிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

3. சகுந்தலாவிற்கு அளித்த வீட்டுமனையில் தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் இல்லை. வாதி சகுந்தலா எனக்கு உறவினாரா என்றால் சரிதான்.நான் சகுந்தலா கணவரின் தம்பி மகன் என்றால் சரிதான். எனக்கு எந்த ஊரில் திருமணம் நடைபெற்றது என்றால் அரிகில்பாடி கிராமத்தில் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற பிறகு எந்த இடத்தில் வசித்து வந்தேன் என்றால் விலாசம் சொல்ல தெரியவில்லை.

4. சகுந்தலா இடத்தில் நான் அத்துமீறி வீடு கட்டியுள்ளதாக என் மீது அவர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் இல்லை. பஞ்சாயத்தில் பேசினார்களா என்றால் இல்லை.நான் தாக்கல் செய்த வீட்டு வரி ரசீது பி.சா.ஆ–1 இல் புதிய காலணி என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும் எந்த முகவரிக்கு வழங்கப்பட்டது என்று தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ – 2 வீட்டு வரி ரசீதில் முகவரி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களிலும் முகவரி குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.சா.ஆ – 6 மின் அட்டையில் முகவரி குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. பி.சா.ஆ – 7 ஆ பதிவேடு ஆவணத்தில் அரசாங்க நிலம் என்று தெரிவித்துள்ளது என்றால் தெரியாது. பி.சா.ஆ – 9 ஆ பதிவீடில் சகுந்தலா நிலம் என்று தெரிவித்துள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ – 10 வாதி மகேந்திரா பைனான்ஸிடம் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கிய ஆவணம் என்றால் தெரியாது.

6. வழக்கு சொத்து முழுவதும் வாதி சகுந்தலாவிற்கு தான் சொந்தம் என்றாலும் நான் அத்து மீறி நுழைந்ததால் வாதி என் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வறுமைகோட்டிற்கு கீழே வருகிறேன் என்பதற்கு எந்த ஆவணமும் அரசாங்கத்தில் ஆவணம் வாங்கி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. என் கிராமத்தில் தோராய மற்றும் தூய பட்டா வழங்குவதற்காக அரசாங்கம் அளந்தார்களா என்றால் தெரியாது.

7. வா.சா.ஆ – 1 படி தோராய பட்டா அளவு தோராயமாக வழங்கபட்டது அரசாங்கம் தூய பட்டா வழங்கினால் தான் முழு உரிமை உறுதி செய்யப்படும் எனவே வாதிக்கு தான் தாவா சொத்தில் முழு உரிமை உள்ளது என்றால் சரிதான். என் பிரமாண பத்திரத்தில் வாதி 1130 அடிகள் சொந்தம் என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் அது தவறு என்றாலும் வாதி முழு சொத்திற்கும் உரிமையாளர் என்றால் சரியல்ல. எங்கள் கிராமத்தில் தூய பட்டா வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் தெரியாது.

8. பி.சா.ஆ – 1 தோராய பட்டாவில் 105 ச.மீ (1130 சதுர அடி) வழங்கப்பட்டுள்ளது ஆனால் தூய பட்டா வழங்கினால் தான் சரியான அளவை உறுதி செய்யப்படும் என்றால் சரியல்ல. தூய பட்டா வழங்கிய பிறகு தான் வாதிக்கு எவ்வளவு அளவு என்று உறுதி செய்யப்படும் என்றால் சரியல்ல. அரசாங்கம் தூய பட்டா வழங்கும் வரைக்கும் தாவா சொத்து அரசாங்க நிலம் என்று தான் காட்டும் என்றால் சரிதான்.

9. நான் நத்தம் புறம்போக்கு நிலத்தில் ஆக்கரிமிப்பு செய்துள்ளேன் என்றாலும் அப்படி ஆக்கரமிப்பு செய்தால் எஸ்.எப் பதிவேட்டில் பதிவு செய்வார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வீடு கட்டியிருந்தால் எஸ்.எப் – 8 இல் பதிவு செய்வார்கள் என்றால் சரியல்ல. நத்தம் புறம்போக்கு என்பதற்கு எஸ்.எப் – 8 அல்லது எஸ்.எப் – 7 பதிவேடு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது.

10. என் பெயரில் தாவா சொத்து குறித்து எந்த வருடத்தில் பட்டா வழங்கினார்கள் என்றால் தெரியாது. எந்த அலுவலகத்தில் வழங்கினார்கள் என்றால் தெரியாது. பட்டா வழங்கி எவ்வளவு வருடம் ஆனது என்றால் தெரியாது. பட்டா என் பெயரில் அல்லது என் கணவர் பெயரில் வழங்கப்பட்டது என்றால் என் பெயரில் வழங்கப்பட்டது. என் பெயரில் பட்டா வழங்கியிருந்தால் வருவாய் துறை பதிவேடு தெரிந்திருக்கும் பதிவேடு எதுவும் இல்லை என்றால் ஞாபகமில்லை.

11. என் பிரமாண பத்திரம் பத்தி 5 இல் தாவா சொத்திற்கு பட்டா வழங்கும்படி வருவாய் துறையில் கேட்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் எனவே தற்போது என் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்று நான் சாட்சியம் அளித்தது தவறு என்றால் சரியல்ல. பட்டா வழங்கியது உண்மையா என்றால் உண்மை. வருவாய் துறையில் பட்டா வழங்கும்படி வேண்டுக்கொள்கிறேன் என்று நான் என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளது உண்மை என்றால் தெரியாது.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**